Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JULY 25 2025

வெள்ளிக்கிழமை 25, ஜூலை 2025 | ஒளி: 10 கதிர் 291 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

**இடைவிலகல்**

**2019ஆம் ஆண்டில் 16,673 பேர்**

**2021ஆம் ஆண்டில் 20,759 பேர்**

**2024ஆம் ஆண்டில் 20,755 பேர்**

**ஒரு மாணவரும் சேர்க்கப்படாத பாடசாலைகள் –98**

**10 மாணவர்களுக்கும் குறைவான பாடசாலைகள் –115**

**20 மாணவர்களுக்கும் குறைவான பாடசாலைகள் –406**

**30 மாணவர்களுக்கும் குறைவான பாடசாலை –752**

**50 க்கும் குறைவான மாணவர்களை கொண்ட பாடசாலைகள் –1,506**

**100 மாணவர்களை விடவும் குறைவான பாடசாலைகள் –3,144**

## 13 வருடங்கள் பாடசாலை கல்வியை பெறாது "எந்தக் குழந்தையும் இடைவிலகக் கூடாது"



13 வருடங்கள் கல்வியை பெறாமல் பாடசாலைகளை விட்டுச் செல்லக்கூடாது என்றும் பிள்ளைகளுக்கு சிறுவர் வாழ்க்கையை அனுபவிக்கக்கூடியவாறும், அவர்கள் 13 வருட கட்டாய கல்வியுடன் அவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கக்கூடியவாறும் கல்வி மறுசீரமைப்பு நடைமுறைப்படுத்தப்படும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (24) அன்று நடைபெற்ற கல்வி மறுசீரமைப்பு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இதனை கூறினார்.

தனது உரையில் ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,,

கல்வி மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடல்கள் நடத்தப்படும் போது பலரும் பாடங்கள் தொடர்பில் கதைக்க ஆரம்பித்துள்ளனர். வரலாறு உள்ளடக்கப்படுமா? இல்லையா? என்றும் கலந்துரையாடினர். ஆனால் இது பாடத்திட்டங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்ட திருத்தமாக இந்த யோசனைத் திட்டம் இருக்காது. எமது முழு சமூகம், பொருளாதாரம் மற்றும் எமது நாட்டை புதிய மாற்றத்திற்குக் கொண்டு செல்லும் மறுசீரமைப்பாக அமையும்

தற்போதைய கல்வி முறைமையும் அதன்மூலம் உருவாகியுள்ள இளைஞர் சந்ததி தொடர்பிலும் அதேபோன்று இந்த கல்வி முறைமையால் ஏற்பட்டுள்ள பொருளாதாரம் தொடர்பிலும் எவருக்கும் திருப்தியடைய முடியாது. இதனால் எமக்கு மிகவும் பரந்துபட்ட கல்வி மறுசீரமைப்பு அவசியமாகும்.

இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்காக எம்மிடம் இருக்கும் முக்கிய வளமாக மனித வளங்களே உள்ளன. இதனால் இந்த மனித வளத்தைப் பலப்படுத்தி எவ்வாறு நாட்டை புதிய நிலைக்குக் கொண்டு செல்வது என்றே பார்க்கின்றோம். வறுமை நிலையில் இருந்து மீட்கவும், குற்றங்களைக் குறைக்கவும் கல்வி முக்கியமானது. இந்த மாற்றத்தின் ஆரம்பம் கல்வியாகும். இதனாலேயே எமது கொள்கை பிரகடனத்தில் கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் குறிப்பிட்டுள்ளோம். முதலாவதாக கல்வியில் இருக்கும் பிரச்சினைகளை அடையாளம் காண வேண்டும். இல்லாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் பிரயோசனமில்லை. இந்த நேரத்தில் கல்வித்துறை முகங்கொடுத்துள்ள நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டும்.

தொடர்ச்சி P2

## "என்னை மன்னியுங்கள்"



சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவை புதன்கிழமை(23) அன்று வாயை மூடச் சொன்னதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன, வியாழக்கிழமை (24) அன்று மன்னிப்பு கோரினார்.

"சபாநாயகர் அந்த நேரத்தில் நடந்து கொண்ட விதம் காரணமாக நான் ஆக்ரோஷமான வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

எனது ஒழுக்கம் எங்கே என்று சபாநாயகர் கேள்வி எழுப்பினார், மேலும் எனது மன்னிப்பு அந்தக் கேள்விக்கான பதில்" என்று கவிரத்ன கூறினார்.

மேலும், சபைத் தலைவர் பிமல் ரத்நாயக்க தனது சிறப்புரிமைகளை மீறியதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஆறு மாதங்களில் புற்றுநோயாளர்கள் 36,000 பேர் அனுமதி



மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு நாளாந்தம் 950 முதல் 1,000 பேர் வரை சிகிச்சைக்காக வருகின்றனர். கடந்த ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை மட்டும் 36 ஆயிரம் பேர் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, வைத்தியசாலையில் பாரிய மருந்து தட்டுப்பாடு இல்லை என சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சத விஜேமுனி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## போதைப்பொருள் தொடர்பில் 6,000 பேர் கைது



போதைப்பொருள் தொடர்பில் அண்மைக் காலங்களில் 6,000க்கும் மேற்பட்ட நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். போதைப் பொருள் சம்பந்தமான வழக்குகளுக்கு இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை அவசியம் என்பதுடன் இரசாயன பகுப்பாய்வு பிரிவில் நிலவும் ஆளணி பற்றாக்குறையே வழக்குகள் தாமதத்திற்கு காரணம் என நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (24) அன்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹுமான் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## "தனது உயிருக்கு அச்சுறுத்தல்"

மாத்தளை மனித புதைகுழியுடன் தொடர்புடைய கொலையாளிகளின் பிள்ளைகளும், தனியார் சித்திரவதை முகாம்களை நடத்தியவர்களும் இந்த பாராளுமன்றத்தில் இருப்பதாக சபை முதல்வர் வெளியிட்ட கருத்தால் தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (24) அன்று சிறப்புரிமை பிரச்சினையை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2



### விடுதலை நிகழ்வு

அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வலியுறுத்தும் விடுதலை நிகழ்வு யாழ்ப்பாணம் கிட்டு பூங்காவில் வியாழக்கிழமை (24) அன்று ஆரம்பமானது.

– நிதர்ஷன் வினோத் (மேலதிக படங்கள் P3)

## வெலிகம பிரதேச சபையைக் கைப்பற்றியது ஐ.ம.ச.

பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த வெலிகம பிரதேச சபையின் அதிகாரத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி (SJB) உறுதிப்படுத்தி, தவிசாளர் பதவியைப் பெற்றுள்ளது.

ஆரம்ப அமர்வு, வியாழக்கிழமை (24) அன்று நடைபெற்றது. அதன்பின்னர், வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வெலிகம பிரதேச சபையின் புதிய தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரான லசந்த விக்ரமசேகர தெளிவான பெரும்பான்மையுடன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தேசிய மக்கள் சக்தியின் (NPP) இரண்டு உறுப்பினர்கள் கடத்தப்பட்டதாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்து, கடந்தமுறை வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வட்டவன் பகுதி விவகாரம்: கடுமையான எதிர்ப்பால் தீர்மானிப்பது இடைநிறுத்தம்

எஸ்.கீதபொன்கலன்

வெருகல் பிரதேச செயலக பிரிவின் வட்டவன் பகுதியில், தொல்லியலுக்கான இடங்கள் இருக்குமாயின் அது பற்றிய தீர்மானம் எதிர்வரும் வெருகல் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட வேண்டும் என வெருகல் பிரதேச சபையின் தவிசாளர் சே.கருணாநிதி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இப்பகுதியில் தொல்லியல் பகுதிகள் உள்ளனவா? என்பது தொடர்பாக, அதிகாரிகள், வியாழக்கிழமை (24) அன்று கள விஜயம் செய்துள்ளனர்.

வட்டவன் பகுதியில் தமிழ் மக்களுக்கு சொந்தமான வயற்காணிகள் உள்ளன. இக்காணிகளின் நடுவில் சிறு குன்று பகுதியும் உள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் தொல்லியல் துறையினர்,

தொடர்ச்சி P2



## ஆளும் தமிழ் எம்.பிக்கள் இருவர் "பேஸ்புக்கில் இனவாதத்தை தூண்டுவதற்கு முயற்சி"



ஆளும் கட்சி தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் பேஸ்புக்கில் தமிழ் மக்களிடையே இனவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்படுகின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தி ஹெக்டர் ஹப்புகாமி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (24) அன்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, சபாநாயகரிடம் கோரிக்கையொன்றை முன்வைத்தே ஹெக்டர் ஹப்புகாமி இதனைக் கூறினார்.

தொடர்ச்சி P2

## வடக்கில், "80,000 ஏக்கர் காணிகளை விடுவிக்க நடவடிக்கை"



முல்லைத்தீவு மாவட்டத்தில் 54,000 ஏக்கர் காணி, வவுனியா மாவட்டத்தில் 24,000 ஏக்கர் காணி மற்றும் மன்னார் மாவட்டத்தில் 2,000க்கும் மேற்பட்ட ஹெக்டெயர் காணிகளை விடுவிப்பது தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகக் காணி, நீர்ப்பாசன பிரதியமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (24) அன்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் நிலையியற் கட்டளை 27/2 ன் கீழ் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறுகையில், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலவும் காணிப் பிரச்சினைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்களுடன் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

தொடர்ச்சி P2

## ரம்புட்டான் விபத்து அதிகரிப்பு



ரம்புட்டான் மரங்களில் இருந்து விழும் மக்கள் சம்பந்தப்பட்ட விபத்துக்கள் அதிகரித்து வருவது குறித்து நிபுணர்கள் கவலை தெரிவித்துள்ளனர், இது பழம் பறிக்கும் பருவத்தில் பாதுகாப்பு கவலைகள் எழுந்துள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு தேசிய மருத்துவமனையின் விபத்துப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் இந்திகா ஜகோடா கூறுகையில், இதுபோன்ற சம்பவங்களால் தினமும் சுமார் ஐந்து நோயாளிகள் காயங்களுடன் அனுமதிக்கப்படுவதாகவும், பலர் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் கூறினார்.

விலங்குகளிடமிருந்து பழங்களைப் பாதுகாக்க ரம்புட்டான் மரங்களைச் சுற்றி விளக்குகளை சரிசெய்ய சில நபர்கள் மின்சாரக் கம்பிகளைப் பொருத்துவதாகவும், இதனால் பெரும்பாலும் தற்செயலான காயங்கள் ஏற்படுவதாகவும் அவர் கூறினார். மின்சார அதிர்ச்சிக்குப் பிறகு, அந்த நபரை நகர்த்தவோ, திருப்பவோ அல்லது உட்கார வைக்கவோ கூடாது, பின்னர் அந்த நபரை அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று மேலும் தீங்கைக் குறைக்க வேண்டும் என்று ஜகோடா எச்சரித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

### 13 வருடங்கள் பாடசாலை கல்வியை பெறாது

# “எந்தக் குழந்தையும் இடைவிலகக் கூடாது”

இதில் பிள்ளைகள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகுவது ஒரு நெருக்கடியாக உள்ளது. 2019ஆம் ஆண்டில் 16,673 பேர் இடை விலகியுள்ளனர். அதேபோன்று 2021ஆம் ஆண்டில் 20,759 பேரும் 2024ஆம் ஆண்டில் 20,755 பேரும் இடைவிலகியுள்ளனர். இவர்கள் படிக்க வேண்டிய காலம் இருந்தும் பாடசாலைகளை விட்டுச் சென்றுள்ளனர். இதனால் 13 வருடங்கள் கல்வியைப் பெறாமல் பாடசாலைகளை விட்டுச் செல்லக்கூடாது.

அதாவது 2006ஆம் ஆண்டில் பிறந்த பிள்ளை 2011ஆம் ஆண்டில் பாடசாலையில் சேர்கின்றது. அதன்படி 358,596 பேர் பாடசாலையில் சேர்வதுடன், அவர்கள் 2021ஆம் ஆண்டிலேயே சாதாரண தரப் பரீட்சைக்கு முகங்கொடுக்க வேண்டும். ஆனால், 311,000 பேரே அந்தப் பரீட்சைக்கு முகங்கொடுக்கின்றனர். இதன்படி, 47,000 பேர் வரையிலானோர் பரீட்சைக்கு முன்னரே இடை விலகியுள்ளனர்.

இவ்வாறான நிலைமையில் கல்வி மறுசீரமைப்பு அவசியமாகும். 13 வருடக் கல்வியைக் கட்டாயமாக்கி இந்த பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டும். எந்தவொரு பிள்ளையும் பாடசாலையில் இருந்து இடைவிலகிவிடக்கூடாது. நாங்கள் கல்வித் திட்டங்களை முன்னெடுப்பதுடன், 3 நாட்கள் அந்தப் பிள்ளை தொடர்ச்சியாகப் பாடசாலைக்கு வரவிட்டால் அரச அதிகாரி அந்தப் பிள்ளை தொடர்பில் தேடிப்பார்க்க வேண்டும்.

அத்துடன், பாடசாலைகளில் உள்ள மாணவர் எண்ணிக்கை தொடர்பில் கூறும் போது 2023ஆம் ஆண்டில் ஒரு மாணவரும் சேர்க்கப்படாத 98 பாடசாலைகள் உள்ளன.

அத்துடன், 10 மாணவர்களுக்கும் குறைவான எண்ணிக்கையுடைய 115 பாடசாலைகள் உள்ளன. 20 மாணவர்களுக்கும் குறைவான எண்ணிக்கையுடைய 406 பாடசாலைகளும் 30 மாணவர்களுக்கும் குறைவான எண்ணிக்கையுடைய 752 பாடசாலைகளும் 50க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட 1,506 பாடசாலைகளும் உள்ளன. இதனால் முழு பாடசாலை கட்டமைப்பில் 15 வீதமானவை 50க்கும் குறைவான மாணவர்களைக் கொண்டுள்ளது. 100 மாணவர்களை விடவும் குறைவான எண்ணிக்கை கொண்ட 3,144 பாடசாலைகள் உள்ளன.

இதன்படி, அரச பாடசாலைகளில் மூன்றில் ஒரு பங்கு நூற்றுக்கும் குறைவான மாணவர்களே உள்ளன. இதனால் பாடசாலை கட்டமைப்புகள் தொடர்பில் மீளாய்வு செய்ய வேண்டும். இந்த தீர்மானத்தை நாங்கள் நிச்சயம் எடுப்போம். சில பாடசாலைகளை மூட வேண்டும். சில பாடசாலைகளை இணைக்க வேண்டும். சில இடங்களில் புதிதாகப் பாடசாலைகளை ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

கிராமப்புறங்களில், சமூக பின்னடைவு உள்ள பகுதிகளைச் சேர்ந்த பிள்ளைகளே இவ்வாறான பாடசாலைகளில் கல்வி கற்கும். ஆனால் இந்த பிள்ளைகளுக்கு புதிய சமூகத்துடன் இணையாது. புதிய திறமைகள் உருவாகாது. புதிய வாய்ப்புகள் உருவாகாது. பாடசாலைகளும் ஊரும் ஒரே சமூக மட்டத்திலேயே இருக்கும். இதனால் இதில் மாற்றங்களைச் செய்ய வேண்டும்.

அது தொடர்பில் எவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது என்பது தொடர்பில் அதிகாரிகள் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மாணவர்களுக்குப் போக்குவரத்து பிரச்சினைகள் இருந்தால் அதற்கு தேவையான ஏற்பாடுகளையும் செய்யலாம்.

இதேவேளை, சகல மாவட்டங்களிலும் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது. 18 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற ரீதியில் இருந்தாலும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. 30 மாணவர்கள் இருக்கும் இடத்தில் 9 ஆசிரியர்கள் இருக்கும் பாடசாலைகளும் 3 மாணவர்களுக்கு 3 ஆசிரியர்கள் உள்ள பாடசாலைகளும் உள்ளன. இதன்மூலம் மனித வளம் வீணடிக்கப்படுகின்றது. இதனால் கல்வி மறுசீரமைப்பின் ஊடாக சகல பிள்ளைகளுக்கும் தரமான கல்வியை வழங்க நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன், சமூகம் தொடர்பான அக்கறை இல்லாத பிள்ளைகள் உருவாகின்றனர். இயந்திரங்கள் போன்றே பிள்ளைகள் வளர்க்கப்படுகின்றனர். அதிகாலை 4 மணிக்கு டியூசன் நடக்கின்றது. அந்த வகுப்பு முடிந்து பாடசாலை சென்று பின்னர் ‘டியூசன்’ போகின்றனர். அதிகாலை 1 மணி வரையிலும் அவ்வாறு கற்க வேண்டியுள்ளது. பிள்ளைகளுக்கு சிறுவர் வாழ்வு அவசியமில்லையா? இவ்வாறு பயணிக்க முடியாது. பிள்ளைகள் மீதான கல்வி சுமைகளைக் குறைக்க வேண்டும். இது எமது பொறுப்பாகும்.

பிள்ளைகளின் நிலைமையைப் பாருங்கள். தூர இடங்களில் இருந்தும் கொழும்பு பாடசாலைகளுக்குப் பிள்ளைகள் வருகின்றனர். காலையில் தாய் எழுப்பும் போதும் பிள்ளை தூங்குகிறது, பஸ்ஸிலும் தூங்குகிறது. பாடசாலையிலும் தூங்குகிறது. இது பாவமில்லையா? பிள்ளை வெளியில் சென்று விளையாட வேண்டும். ஆனால், அதற்கு இடமளிக்கப்படுவதில்லை. ‘ரோபோ’ போன்று பிள்ளைகளை உருவாக்க வேண்டுமா? அதனை மாற்றியமைக்க வேண்டும். அதேபோன்று, அவர்களுக்கு சிறந்த வாழ்க்கையை உருவாக்கக்கூடியவாறு சிறந்த தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக்கொள்ளக்கூடிய வகையில் மறுசீரமைப்புகள் இடம்பெறும் என்றார்.



# “என்னை மன்னியுங்கள்”

“நான் ஒரு கொலைகாரனின் மகள் என்று சபைத் தலைவர் கூறினார். என் தந்தை யாரையும் கொல்லவில்லை, ஆனால், மாத்தளை மாவட்ட மக்களுக்கு உயிர் கொடுத்தார்” என்று அவர் மேலும் கூறினார்.

இருப்பினும், 1989ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் போது பல சித்திரவதை அறைகள் இருந்ததை அவர் ஏற்றுக்கொண்டார்.

# புற்றுநோயாளர்கள்...

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (24) அன்று வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. சமிந்திராணி கிரியெல்ல கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பதிலளிக்கையில்,

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஜூன் 30ஆம் திகதிவரை 6,700 புதிய நோயாளிகள் பதிவு செய்துள்ளதுடன் இந்த காலப்பகுதியில் 36,000 பேர் வாட்டுகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். பொதுவாக நாளாந்தம் 950 முதல் 1,000 பேர் வரை சிகிச்சைக்காக வருகின்றனர்.

மகரகம புற்றுநோய் வைத்தியசாலை உட்பட வைத்தியசாலைகளில் நிதி நன்கொடையாகப் பெற்றுக் கொள்ளப்படுவதில்லை. மாறாக உபகரணங்கள் நன்கொடையாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. என்றாலும், சுகாதார அமைச்சினால் ஏற்படுத்தப்பட்டுள்ள தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் கீழ் இந்த வைத்தியசாலைக்காக வங்கி கணக்கு ஒன்று இருக்கிறது.

அந்த கணக்கு கூற்றின் பிரகாரம் 2020ஆம் ஆண்டு அபேக்ஷா வைத்தியசாலைக்கு 242 மில்லியன் ரூபாய் நன்கொடையாக கிடைக்கப்பெற்றுள்ளது. 2021இல் 280 மில்லியன், 2022இல் 337 மில்லியன், 2023இல் 406 மில்லியன், 2024 இல் 461 மில்லியன் ரூபாய் மற்றும் 2025இல் இதுவரை 478 மில்லியன் ரூபாய் இந்த கணக்கு கீழ் இருக்கிறது.

மகரகம புற்றுநோய் வைத்தியசாலையின் கணக்குக்கு வரும் நிதி நன்கொடைகள் அந்த வைத்தியசாலையின் தேவைக்காக மாத்திரம் பயன்படுத்தப்படும். வேறு வைத்தியசாலைகளின் தேவைக்கு இந்த நிதி பயன்படுத்தப்படாது. அதேவேளை, இந்த காலப்பகுதியில் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற நிதி இதுவரை பயன்படுத்தப்படவில்லை.

கிடைக்கப்பெற்றுள்ள நன்கொடை நிதியை பயன்படுத்தி, இந்த வைத்தியசாலையில் தற்போது இருக்கும் சீடி ஸ்கேனருக்கு பதிலாக புதிய சிடி ஸ்கேனர் இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்வதற்கான கொள்முதல் நடவடிக்கையை இடம்பெற்று வருகிறது. புதிய இயந்திரம் விலைக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் மீதமாகும் பணத்தை பயன்படுத்தி, மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்குத் தேவையாகும் அத்தியாவசிய மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்ய தீர்மானித்திருக்கிறோம்.

மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் பாரிய மருந்து தட்டுப்பாடு இல்லை. அவ்வாறு தட்டுப்பாடாக இருக்கும் மருந்துகளைப் பெற்றுக்கொள்ளப் பிரதேச பணிப்பாளருக்கு அந்த மருந்துகளைத் தேசிய மட்டத்தில் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கி இருக்கிறோம். அதற்காக நிதியும் ஒதுக்கி இருக்கிறோம். அதேபோன்று, சில மருந்துகள் பொதுவாக வழங்குவதில்லை. நோயாளர்களின் பெயருக்கே விநியோகிக்கப்படுகின்றன. அந்த மருந்தைப் பெற்றுக்கொள்ள அதற்கு என விண்ணப்பம் ஒன்று இருக்கிறது. அதனைப் பூர்த்தி செய்து, மருத்துவ விநியோக பிரிவுக்கு வழங்கினால், அவர்கள் அந்த மருந்தை விநியோகிக்க தீர்மானிப்பார்கள். அதனால், இல்லாத மருந்துகளையும் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றார்.

வடக்கில்,

# “80,000 ஏக்கர் காணிகளை விடுவிக்க நடவடிக்கை”

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 54,000 ஏக்கர் காணி, வவுனியா மாவட்டத்தில் 24,000 ஏக்கர் காணி மற்றும் மன்னார் மாவட்டத்தில் 2000க்கும் மேற்பட்ட ஹெக்டெயர் காணிகளை விடுவிப்பது தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. வன பாதுகாப்பு திணைக்களத்தால் அதற்கான இணக்கப்பாடும் எட்டப்பட்டுள்ளது.

தற்போது அது தொடர்பில் ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தையே நடத்தப்பட்டுள்ளது என்பதால் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக மாவட்ட ரீதியில் குழுக்கள் அமைக்கப்பட்டு நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுத்துச் செல்லப்படும் என்றார்.

# ரம்புட்டான் விபத்து அதிகரிப்பு



இதற்கிடையில், ரம்புட்டான் விதைகள் தொண்டையில் சிக்கி மூச்சுத் திணறடிப்பதால் குழந்தைகளின் உயிர்கள் இழக்கப்படுவதால், பெற்றோர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.

ரம்புட்டான் அறுவடை காலத்தில் எச்சரிக்கையாக இருக்கவும், பாதுகாப்பற்ற நடைமுறைகளைத் தவிர்க்குமாறும் பொதுமக்களை அதிகாரிகள் வலியுறுத்துகின்றனர்.

# “பேஸ்புக்கில் இனவாதத்தை தூண்டுவதற்கு முயற்சி”



மேலும் அவர் தெரிவிக்கையில், கடற்றொழில் அமைச்சரிடம் கடந்த முறை கேள்வியெழுப்பிய போது இங்கே சம்பவமொன்று நடந்தது. அதாவது நாங்கள் தமிழ் மொழியையும் தமிழ் மக்களையும் மதிப்பவர்களே. குறித்த சம்பவத்தின் போது தமிழ் மொழி தொடர்பில் எவ்வித பிரச்சினையும் இல்லை என்பதனை தெளிவாக குறிப்பிட்டிருந்தோம்.

ஆனால், அமைச்சரும் அவருடன் இருக்கும் மேலும் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் எனது புகைப்படத்தையும் பயன்படுத்தி அவர்களின் பேஸ்புக் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளனர். நடக்காத ஒன்றை சிங்கள பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் படத்துடன் அவ்வாறு பேஸ்புக்கில் குறிப்பிட்டு தமிழ் மக்களிடையே கொண்டு செல்லும் போது அங்கே இனவாதமே உருவாகும். அவ்வாறான விடயங்கள் மூலமே இனவாத பிரச்சினைகள் ஆரம்பமாகும் என்றார்.

# “தனது உயிருக்கு...

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

ஸ்ரீ தலதா மாளிகை மீது நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் 2024 ஜூலை 23ஆம் திகதி என்னால் எழுப்பப்பட்ட கேள்வியின் போது, இடைக் கேள்வியில் தலதா மாளிகைக்கு முன்னால் மூடப்பட்டுள்ள வீதியை திறக்காமை தொடர்பில் கேட்ட போது, அதற்கு இடையூறு ஏற்படும் வகையில் சபை முதல்வர் செயற்பட்டதுடன், அவர் வெளியீட்ட கருத்தின் மூலம் என் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது.

மாத்தளை மனித புதைகுழியில் 140 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளதாகவும், அந்த கொலைகாரர்களின் மகள்மார் இங்கே இருக்கின்றனர் என்றும், அது தொடர்பில் விசாரணைகள் நடப்பதாகவும், இங்குள்ளவர்களில் சிலர் தனியார் சித்திரவதை முகாம்களின் உரிமையாளர்கள் என்றும் கூறியிருந்தார்.

இதேவேளை, 87, 88 மற்றும் 89 காலத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் எம்.பிக்கள் தனிப்பட்ட முகாம்களை வைத்திருந்தமை புதுமையான விடயம் அல்ல என்றும் கூறியிருந்தார். இந்த கருத்தில் குறிப்பிட்ட மாத்தளை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய எம்.பியொருவரின் மகள் என்ற வகையில் நான் மட்டுமே இருக்கின்றேன். அத்துடன், எதிர்க்கட்சியில் நானும் சமிந்திராணி கிரியெல்லவும் மட்டுமே இருக்கின்றோம். இதனால் இது என்னை இலக்காகக் கொண்டு செய்யப்பட்ட அரசியல் கருத்தாகவே பார்க்கின்றேன்.

இதனை நான் கண்டிக்கின்றேன். எவ்வாறாயினும், எனது தந்தை மக்களைக் கொன்றவர் அல்ல. மக்களை வாழ வைத்தவர் முழு மாத்தளை மாவட்டமும், இலங்கையும் அறியும். தந்தையின் மரபணுவே எனது உடலிலும் இருக்கும் என்பதனை கூறிக்கொள்கின்றேன்.

இந்நிலையில், குறிப்பிட்ட கருத்து எனது தனிப்பட்ட பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலானது என்பதுடன், எனது மக்கள் பணிகளுக்கும் கட்டுப்பாடுகளை உருவாக்கும். இதனால் எனது பாதுகாப்பு தொடர்பில் நான் அடிக்கடி சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவித்துள்ள போதும். இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இவ்வாறான நிலைமையில் அரசாங்கத்தில் முக்கிய பொறுப்பில் இருக்கும் ஒருவர் செய்யும் இந்த கருத்துக்களால் எனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது. இதனால் சபை முதல்வர் 2024 ஜூலை 23ஆம் திகதி வெளியிட்ட கருத்து எனது சிறப்புரிமையை மீறுவதாக அமையும். இந்த விடயத்தைச் சிறப்புரிமை குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு கோருகின்றோம்.

அத்துடன், சபை முதல்வர் வெளியிட்ட கருத்தை மீளப்பெற்றுக்கொள்ளவும், அதனை ஹன்சாட் பதிவில் இருந்து நீக்குவதற்கும் உத்தரவிடுமாறு சபாநாயகரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இதனை விசாரிப்பதற்காக விசேட குழுவொன்றை அமைக்குமாறும் நான் கோரிக்கை விடுகின்றேன். மேலும் அவர் குறிப்பிடும் மனித புதைகுழிகள் தொடர்பில் முறையான விசாரணைகளை நடத்திப் பொறுப்பு கூற வேண்டியவர்களைச் சட்டத்தின் முன்கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றேன்.

இதனை செய்யாமல் எனது அரசியலமைப்பை சீர்குலைப்பதற்காக இதனை பயன்படுத்த வேண்டாம் என்றும் கோருகின்றேன் என்றார்.

# 6,000 பேர் கைது

இரசாயன பகுப்பாய்வு அறிக்கைகள் உரிய நேரத்தில் கிடைக்காததால் அநேகமான வழக்குகள் தாமதம் அடைகின்றன அதனால் கைதானவர்களின் விடுதலையும் தாமதமாகின்றன அந்த அறிக்கைகளை உரிய நேரத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா? என்று முஜிபுர் ரஹ்மான் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

நாட்டில் கொரோனா நிலவிய சூழ்நிலையில் சிறைக் கைதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. குறைந்த அளவில் போதைப் பொருளை வைத்திருந்து கைது செய்தவர்களை விடுவிப்பது என்ற கொள்கை ரீதியான முடிவு எடுக்கப்பட்டது.அதுவும் கூட இரசாயன பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு இல்லாமல் எவரையும் விடுவிக்க முடியாது. போதைப்பொருள் சட்டத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதில் 10 கிராம் போதைப் பொருளுக்கு அதிகம் என்றால் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது காணப்படும் பிரச்சினை என்னவென்றால், இரசாயன பகுப்பாய்வு சோதனை அறிக்கை கிடைக்கும் வரை எந்த நீதிமன்றம் என்பதைக் கூட தெரிவு செய்ய முடியாத நிலையே காணப்படுகிறது. அந்த வகையில் இரசாயன பகுப்பாய்வு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதே அவசியமாக உள்ளது.

அண்மையில் சுமார் 6,000 பேர் போதைப்பொருள் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதும் ஏனைய வழக்குகள் தாமதமாவதற்குக் காரணமாகிறது. நாம் இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்புவது கஞ்சாவா? அல்லது குடுவா? என்பதைக் கண்டறிவதற்கு மாத்திரமல்ல.

அண்மைக் காலங்களில் சிறிய அளவில் போதைப் பொருளை வைத்திருந்தவர்களும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

எனினும் சிறைச்சாலைகளில் உள்ளவர்களில் அதிகமானோர் பெருந்தொகை போதைப் பொருட்களுடன் தொடர்பு பட்டவர்கள் என்றார்.

# கடுமையான எதிர்ப்பால் தீர்மானிப்பது இடைநிறுத்தம்

இப்பகுதியை தொல்லியல் பகுதி எனக்கூறி அறிவித்தல் பலகை ஒன்றை நட்டிருந்தனர். பொதுமக்களின் எதிர்ப்பை அடுத்து அது அகற்றப்பட்டது.

இந்நிலையில், வெருகல் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் கடந்த 17ஆம் திகதி நடைபெற்றது.

இவ்விடயம் ஆராயப்பட்டது.

அப்போது, தொல்லியல் துறையினர், வனவள பாதுகாப்பு திணைக்களம்,வன ஜீவராசிகள் திணைக்களம்,பிரதேச செயலகம்,பிரதேச சபை என்பன இணைந்து குறித்த இடங்களைப் பார்வையிட வேண்டும்.

அது தொடர்பான அறிக்கை நடைபெறவுள்ள ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட வேண்டும். அதன் பின்னர் பொருத்தமான தீர்மானம் எடுக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டு இருந்தது.

இவ்வாறான நிலையில், வியாழக்கிழமை (24) காலை விஜயத்தின் போது, இறுதி முடிவை எடுக்கத் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் முயன்ற போது, பிரதேச சபை தவிசாளர் தனது ஆட்சேபனையை முன்வைத்து தீர்மானம் மேற்கொள்வதை இடைநிறுத்தம் செய்துள்ளார்.

# விடுதலை நிகழ்வு

அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வலியுறுத்தும் விடுதலை நிகழ்வு யாழ்ப்பாணம், கிட்டு பூங்காவில் வியாழக்கிழமை (24) அன்று ஆரம்பமானது.

–நிதர்ஷன் வினோத்











# கிணற்றில் இருந்து தாயும் பிள்ளைகளும் சடலங்களாக மீட்பு

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு, மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் பகுதியில் அமைந்திருக்கும் அரச வீட்டுத்திட்ட பயனாளி ஒருவரின் கிணற்றிலிருந்து தாயும் இரண்டு பிள்ளைகளும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராமத்தில் இரண்டு பிள்ளைகளுடன் வசித்து வந்த தாய் ஒருவரும் அவரது இரண்டு பிள்ளைகளும் அவர் வசித்து வந்த வீட்டில் இருந்து சுமார் 500 மீற்றருக்கு அப்பால் உள்ள அரச வீட்டு திட்டத்தில் உள்ள வீட்டு திட்ட பயனாளி ஒருவரின் வீட்டு கிணற்றிலிருந்து சடலமாக வியாழக்கிழமை(24) அன்று மீட்கப்பட்டுள்ளனர்.

உசாகரன் மாலினி (வயது 38) தாய் மற்றும் உசாகரன் மிக்சா (வயது 11) மகள் உசாகரன் சதுசா (வயது 04) ஆகியவர்களே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.




குறித்த கிணற்றின் அருகில் வியாழக்கிழமை(24) அதிகாலை கான் பேக் ஒன்றும் இதர பொருட்கள் சிலவும் காணப்பட்டதை அடுத்து ஊரில் உள்ள மக்கள் அந்த விடயம் தொடர்பாக கிராம அலுவலர் மற்றும் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதன் அடிப்படையில் அங்கு வருகை தந்த கிராம அலுவலர் மற்றும் பொலிஸார் கிணற்றில் சடலங்கள் இருப்பதை அடையாளம் கண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி சம்பவ இடத்திற்கு வருகை தந்து பார்வையிட்டதன் பின்னர் சடலங்கள் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலங்களை மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இவர்கள் உயிர் மாய்த்துக் கொண்டார்களா அல்லது என்ன நடந்தது என்பது தொடர்பில் மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வெளிக்கள உத்தியோகத்தர் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு



செ.தி.பெருமாள்.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் இயங்கும் 'ஆர்பிகோ' கம்பெனிக்கு உரித்தான சாமிமலை கிலனுஜி தோட்ட டீசைட் பிரிவில் தலைமை வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவர் தொழிலாளி ஒருவரால் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து தோட்ட ஊழியர்கள் வியாழக்கிழமை (24) காலை முதல் பணி புறக்கணிப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மல்லியப்பூ தோட்ட பிரதான காரியாலயத்திற்கு முன்பாக இடம் பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் இருபத்தைந்து ஊழியர்கள் பங்கேற்றிருந்தனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த மல்லியப்பூ தோட்ட ஊழியர்கள், இவ்வாறான சம்பவங்கள் நீண்ட நாட்களாக தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற நிலையில் தாம் பெறும் உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் தொழில் புரிந்து வருகின்றதாகவும், குறித்த தோட்டத்தில் தொழிலாளர்கள் மத்தியில் தமது தொழில் சட்டங்களை முன் வைக்க முடியாத நிலையில் உள்ளதுடன், இவ்வாறு சட்டங்கள் பிரயோகிக்கும் இவர்கள் அடாவடித் தனத்தை பிரயோகித்து வருவதாகவும் தெரிவித்தனர். புதன்கிழமை (23) அன்றும் இவ்வாறான ஒரு நிலையே இடம்பெற்றதாகவும், இது குறித்து தமக்கான உரியத் தீர்வை பெற்றுத் தர மலையக அரசியல் தலைவர்கள் காவல் துறையினர் முன் வர வேண்டும் என்பதுடன் தாக்குதலை மேற்கொண்ட நபரைச் சட்டத்தின் முன் நிறுத்தும் வரை தமது ஆர்ப்பாட்டத்தைக் கைவிடப் போவதில்லை எனவும் தெரிவித்தனர். இது குறித்து பாதிக்கப்பட்ட வெளிக்கள உத்தியோகத்தர் புவனேஸ்வரன் கருத்து தெரிவிக்கையில்,

"புதன்கிழமை (23) காலை பத்து மணிக்கு எனது பணிகளில் ஈடுபட்டிருந்த வேலை டீசைட் பிரிவில் உள்ள 7ஆம் இலக்க மலைக்கு சென்றேன். பெண் தொழிலாளர்கள் பறிக்க வேண்டிய கவாத்து செய்யப்பட்ட மலையில் குறித்த நபர் சட்ட விரோதமான முறையில் கொழுந்து பறித்து வந்தார் அவ்வாறு ஏன் செய்தாய் என்று கேட்டதற்கு என்னைச் சரமாரியாகத் தாக்கினார். அதன் பிறகு மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துவிட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறேன்" என கூறியுள்ளதுடன் தனக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் குற்றம் சுமத்தப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட நபர் ஜெயசுதன் கூறுகையில்,

"எனக்கு புதன்கிழமை (23) அன்று வழங்கப்பட்ட கொழுந்து மலையில், கொழுந்து பறித்து விட்டு மாற்று பாதையில் கொழுந்தைத் தூக்கிக் கொண்டு வந்தேன். அந்த நேரத்தில், கண்டக்டர் ஐயா அவ்வழியாக வந்தார். நான் வேறு மலையில் கொழுந்து பறித்ததாகத் தூசன வார்த்தைகளால் பேசினார் நானும் பதிலுக்குப் பேசினேன் வேறு எதுவும் நடக்கவில்லை. என் மீது பொய் குற்றம் சுமத்தி பழிவாங்க முயற்சி செய்கிறார்" என்றார்.

குறித்த விடயம் தொடர்பாகத் தொழிலாளர்களின் இயல்பு நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். சிறுவர் பராமரிப்பு நிலையம் மூடப்பட்டிருந்ததனால் தாய்மார்கள் பணிக்குச் செல்லாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே, குறித்த விடயம் சம்பந்தமாக பொறுப்பு வாய்ந்த தரப்பினர் நடவடிக்கை எடுக்க முன் வர வேண்டியது காலத்தின் கட்டாயம்.

## உணவு ஒவ்வாமையால்
# உணவகங்கள் பரிசோதனை

ஏ.எச்.ஹஸ்பர்



கிண்ணியா பிரதேச சகல உணவகங்களும் பரிசோதனை இடம் பெற்று வருவதாக கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம். எம்.அஜீத், கிண்ணியாவில் வியாழக்கிழமை (24)இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில் "கடந்த 21ஆம் திகதி கிண்ணியா பிரதான வீதியில் உள்ள உணவகம் ஒன்றில் இரவு நேர சாப்பாட்டை உட்கொண்ட 39 பேர் கிண்ணியா தள வைத்தியசாலையில், மூதூர் 05, குச்சவெளி 05 என 49 நபர்களும் தனியார் மருந்தகங்களில் 20 பேர்களும் ஒவ்வாமை காரணமாக சிகிச்சை பெற்று வருகின்றனர்.


தற்போது சிகிச்சை அளிக்கப்பட்டு தேரி வருகின்றனர். இதில் கிண்ணியாவில் 03 சிறுவர்களும், மூதூரில் 2 சிறுவர்களும் உள்ளடங்குவர்

ஒரே குடும்பத்தில் ஆறு பேர்கள் கூட பாதிக்கப்பட்டுள்ளனர் .இதனை தொடர்ந்து குறித்த உணவகத்தை எங்கள் குழுவினர் சென்று உணவு மாதிரிகளை கொழும்பு MRI க்கு அனுப்பியுள்ளோம் இந்த முடிவுகளுக்காக காத்திருக்கிறோம்

இருந்தபோதிலும், உணவு ஒவ்வாமை ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரியவருகிறது.

உணவகங்களில் இவ்வாறான தவறு வரக் கூடாது என பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளதுடன் முன்னரும் நீதிமன்ற வழக்கு தொடரப்பட்டுள்ளது எனவே பொது மக்கள் இவ்வாறான உணவுகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும்" எனவும் மேலும் கூறினார்.

# நீர் வரத்து அதிகரிப்பு



எஷ்.சதீஷ்

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் ஒரு வான் கதவு வியாழக்கிழமை (23) அதிகாலை திறக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் கொத்மலை நீர் பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்தால் நீர்த்தேக்கத்தின் மற்ற வான் பாதைகளும் தானாகவே திறக்கப்படும் என்பதால், நீர்த்தேக்க அணையின் கீழ் கொத்மலை ஓயாவின் இருபுறமும் வசிப்பவர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப் பகுதியில் பெய்து வரும் கனமழை காரணமாக செண்கிளேயார் மற்றும் டெவோன் நீர்வீழ்ச்சிகளின் நீர் மட்டமும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியையின் நகை அபகரிப்பு

எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார் - நானாட்டான் முருங்கன் வீதியில் வசித்து வரும் ஓய்வு பெற்ற ஆசிரியை ஒருவரின் வீட்டிற்குள் முகமூடியுடன் புகுந்த ஒருவர் கத்தியை காட்டி மிரட்டி கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை புதன்கிழமை (23) மாலை அபகரித்துச் சென்றுள்ளார்.

குறித்த ஆசிரியை, வீட்டில் தனிமையில் இருந்த போது பின் பக்க வேலியால் வீட்டுக்குள் புகுந்த திருடன் குறித்த வீட்டின் அருகில் வங்கிகளும் கடைகளும் இருந்த போதும், சத்தம் போடக் கூடாது என்று கத்தி முனையில் மிரட்டி ஆசிரியையின் கழுத்தில் அணிந்திருந்த 7 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய இரண்டரை(2-1/2) பவுன் தங்கச் சங்கிலியை அபகரித்துள்ளதுடன் ஆசிரியை கையில் அணிந்திருந்த வளையல்களை கழற்ற முடியாமல் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக முருங்கன் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

# கஞ்சிபானையின் நெருங்கிய சகா கைது

டி.கே.ஜி.கபில

திட்டமிட்ட குற்றத் தலைவர் கஞ்சிபானை இம்ரானின் நெருங்கிய சகா நபர் ஒருவர் வியாழக்கிழமை(24) அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் கொழும்பு-13, ஆட்டுப்பட்டித் தெருவைச் சேர்ந்த 45 வயதுடைய முகமது மிஹிலர் முகமது அர்ஷத் என்பவராவார்.

இவர், விசா மற்றும் கடவுச்சீட்டு இல்லாமல் இந்தியாவில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த நிலையில், செவ்வாய்க்கிழமை(22) அன்று இந்திய பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, சென்னையில் இருந்து இண்டிகோ விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வியாழக்கிழமை (24) அன்று அனுப்பப்பட்டார்.

அவர் 2017ஆம் ஆண்டு நாட்டை விட்டு துபாய்க்கு தப்பிச் சென்றுள்ளதுடன், 2019ஆம் ஆண்டு, மகந்துரே மதுஷ் உள்ளிட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத் தலைவர்கள் குழு துபாயில் ஒரு பிறந்தநாள் விழாவில் கைது செய்யப்பட்ட போது இவர் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றுள்ளார்.

அவரது மனைவி மற்றும் குழந்தைகள் இன்னும் இந்தியாவில் இருப்பதாகவும் அவர்களிடம் செல்லுபடியாகும் விசாக்கள் மற்றும் கடவுச்சீட்டுகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நபரை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது.

# பாடசாலையில் இருந்து எந்தவொரு குழந்தையும் இடைவிலகக் கூடாது

“பாடசாலையொன்று திறக்கப்பட்டால் சிறைச்சாலை ஒன்று மூடப்படும்” என்பது பிரான்ஸ் எழுத்தாளரும் அரசியல்வாதியுமான விக்டர் ஹியுகோவின் பிரபலமான கூற்றாகும். இந்தக் கூற்று உணர்த்துவது ஒரு நாட்டிற்கு பாடசாலைக் கல்வி எவ்வளவு முக்கியம் என்பதையாகும்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை(24) நடந்த விவாதத்தில் கலந்துகொண்டு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க ஆற்றிய உரை, பாடசாலை கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளது. தரம் 13 வரை கல்வி முக்கியமானது என்பதுடன், பாடசாலையில் இருந்து எந்தவொரு குழந்தையும் இடைவிலகக் கூடாது என்றார்.

கல்வி மறுசீரமைப்பு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கல்வியுடன் எவ்வாறான பிணைப்பில் உள்ளனர். நாட்டில் இருக்கும் பாடசாலைகளின் நிலைமை என்ன? எத்தனை மாணவர்களுக்கு எத்தனை ஆசிரியர்கள் இருக்கவேண்டும் என வலியுறுத்தினார்.

98 பாடசாலைகளில் ஒரு மாணவனும் இல்லை. 115 பாடசாலைகளில் 10 மாணவர்களுக்குக் குறைவு, 20 மாணவர்களுக்குக் குறைவான பாடசாலை 406 உள்ளன. 30 மாணவர்களுக்குக் குறைவான பாடசாலை 752 உம் உள்ளன.

அத்துடன், 40 மாணவர்களுக்கு குறைவான உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 1141 என்றும், 50 மாணவர்களுக்கு குறைவான பாடசாலைகளின் எண்ணிக்கை 1506 ஆகும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டின் மொத்த பாடசாலைகளின் 15 சதவீதமான பாடசாலைகளில் 50 மாணவர்களுக்கு குறைவாக உள்ளனர். 100 மாணவர்களுக்கும் குறைவான பாடசாலைகள் 3144 உள்ளன என்றும் புள்ளிவிபரங்களை முன்வைத்தார்.

குச்சவெளியில் 2 மாணவர்களுக்கு 2 ஆசிரியர்களும் பண்டாரவளையில் 3 மாணவர்களுக்கு 3 ஆசிரியர்களும் திருகோணமலையில் 4 மாணவர்களுக்கு 4 ஆசிரியர்களும் உள்ளனர்.

சில பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளை முழுமையாக மூட வேண்டும். சில பாடசாலைகளை இணைக்கவேண்டும். இன்னும் சில பிரதேசங்களில் புதிதாக பாடசாலைகளை உருவாக்க வேண்டும் என்றார்.

இவ்வாறான சில பாடசாலைகளில் பாடசாலையில் முன்னெடுக்கவேண்டிய எவ்விதமான இதர செயற்பாடுகளும் இடம்பெறுவதில்லை. விளையாட்டுப்போட்டி, பாடசாலை சுற்றுலா, ஏனைய போட்டி நிகழ்ச்சிகளில் பங்கேற்றல், வெற்றி, தோல்விகளில் பங்கேற்றல் எவையும் இடம்பெறுவதில்லை என்று சுட்டிக்காட்டி ஜனாதிபதி, இதிலிருந்து மாறவேண்டும் என்றார்.

சில பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளை விளையாட விடுவதில்லை. சமூகத்தில் நடைபெறும், நல்லது அல்லது சோகமான சம்பவங்களில் பங்கேற்பதில்லை. விளையாடுவதற்குச் சென்றால், வீட்டுக்கு சாப்பாட்டுக்கு வரவேண்டாமென எச்சரிக்கின்றனர். நண்பர்களுடன் சேர விடுவதில்லை. அக்கம் பக்கத்து வீடுகளில் மரண வீடுகள் இடம்பெற்றால், தங்களுடைய சொந்தக்காரர் வீட்டுக்குப் பிள்ளைகளை அனுப்பிவிடுகின்றனர்.

இவையெல்லாம் தவறான நடைமுறையாகும். தங்களுடைய பிள்ளைகள் பொறியியலாளர்கள், வைத்தியர்கள், கணக்காய்வாளர்கள், சட்டத்தரணிகள் இல்லையேல் சமூகத்தில் உயர்பதவிகளில் மட்டுமே இருக்கவேண்டும் என நினைப்பதும் தவறானது என சுட்டிக்காட்டியுள்ளார்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

யாவருக்கும் சுயபுத்தி உண்டு. வாழ்க்கையில் புது, புது அனுபவங்களூடாக வருகின்ற பகுத்தறிவை, மிகவும் நுட்பமாகப் பொருத்தமான இடங்களில் பிரயோகிப்பதே சுய புத்தியாகும்.

எல்லா விஷயங்களையும் சொல்லிக் கொடுத்தபடி இருக்க முடியாது. பல விடயங்களை நாங்கள் தேட வேண்டியுள்ளது.

மேலும் தனது முழு முயற்சியுடன் நல்ல முடிவை அறிவதே மகிழ்ச்சிகரமானது. கால மாற்றங்கள் அறிவை, அதன் தேவைகளை எமக்கு உணர்த்தியே தீரும்.

அச்சப்படுவதால் மனிதன் முடிவை எடுக்கத் தயங்குகின்றான். தோல்விகளால் மனிதன் எழுவது எப்படி என உண்மையைத் தனது சுய அனுபவத்தால் அறிந்து கொள்கின்றான்.

உலகில் பல அச்சரியங்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன. அத்துடன் பேரழிவுகள், யுத்தங்கள், பஞ்சம் என பல இடர்களைச் சந்திக்காமல் இருக்கமுடியாது. உலகம் முழுவதிலும் எதுவும் நடக்கலாம். இவற்றைக் கடந்து செல்வதே மனித வாழ்க்கை. சக்தி, துணிவுடன் இயங்குக.

– பருத்தியூர் பால.வயிரவநாதன்

## பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை–30

# பசுமைப் புரட்சியை நோக்கி-2



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

1965இல் ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பசுமைப் புரட்சியை முன்னெடுப்பதாகச் சொன்னதோடு, ஆறு விடயங்களில் குறிப்பாகக் கவனம் செலுத்தியது. அதில்,

(1)அதிக விளைச்சல் தரும் விதை வகைகள்.

(2) இரசாயன உரங்கள் குறித்துக் கடந்த கட்டுரையில் ஏனைய விடயங்களை இந்தக் கட்டுரையில் நோக்கலாம்.

(3) டிராக்டர்கள் மற்றும் பிற விவசாய இயந்திரங்கள்: இலங்கையில் நெல் உற்பத்திக்கு, விலங்குகளின் இழுவை சக்தியின் முக்கிய ஆதாரமாக எருமைகள் இருந்துள்ளன. இது முற்றிலும் போதுமானதாக இல்லை என்பது நிரூபிக்கப்பட்டது. உண்மையில் விவசாய முன்னேற்றத்திற்கு ஒரு கடுமையான தடையாக இது செயல்பட்டது. 1967 ஆம் ஆண்டில் எருமைகளின் எண்ணிக்கை எட்டு இலட்சம் என மதிப்பிடப்பட்டது, அதில் 20% (160,000) இழுவைக்குப் பயன்படுபவை. ஒரு நாளில் ஒரு ஏக்கரில் கால் பகுதியை ஒரு ஜோடி எருமைகளால் உழ முடியும் என்பதால், எருமைகளின் எண்ணிக்கை ஒரு நாளைக்கு கையாளக்கூடிய பரப்பளவு ஒரு முறை உழுவதற்கு 20,000 அல்லது மூன்று தடவை முழுமையான உழக்கூடிய நிலப்பரப்பு 6,667 ஏக்கராகும். ஒரு பருவத்தில், இந்த எண்ணிக்கையிலான எருமைகள் 266,680 ஏக்கரில் மட்டுமே வேலை செய்ய முடியும். இது மகா பருவ காலத்தில் பயிரிடப்பட்ட மொத்த விவசாய நிலப்பரப்பில் 25%க்கும் குறைவாக இருந்தது. நாட்டின் நெல் உற்பத்தியில் இந்தப் பிரச்சினை எவ்வளவு தீவிரமானது என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது. இதற்கு அவசரத் தீர்வு நடவடிக்கை தேவைப்பட்டது.

இதற்கான தீர்வுகளில் ஒன்று இயந்திரமயமாக்கல். நெல் உற்பத்திக்கு டிராக்டர்கள் மற்றும் துணை உபகரணங்களின் பற்றாக்குறை இருப்பதாக விவசாய முன்மொழிவுகள் குறிப்பிட்டன. இது ஆயத்த உழவின் தரத்தைக் குறைத்து, தாமதமாக உற்பத்தி செய்வதைத் தவிர்க்க முடியாததாக ஆக்கியது. இது விளைச்சலைக் குறைத்தது. எனவே, 1966 மற்றும் 1970க்கு இடையில் 5,000 நான்கு சக்கர டிராக்டர்களையும், ஆண்டுதோறும் 500 இரு சக்கர டிராக்டர்களையும் இறக்குமதி செய்ய முன்மொழிவுகள் பரிந்துரைத்தன.

இந்த நிலையில், அரசாங்கம் ரூ.64 மில்லியன் செலவில் 5,847 நான்கு சக்கர டிராக்டர்களையும், 6 மில்லியன் ரூபாய் செலவில் 3,249 இரு சக்கர டிராக்டர்களையும் இறக்குமதி செய்ய அனுமதித்தது. கூடுதலாக, 268 கனரக டிராக்டர்கள் இறக்குமதி செய்யப்பட்டன. மே 1968இல், டிராக்டர்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் துணை உபகரணங்களின் இறக்குமதி திறந்த பொது உரிமத்தின் கீழ் வைக்கப்பட்டது.

1966-67ஆம் ஆண்டு மகா பருவ காலத்தில், அம்பாறையில் 84% விவசாயிகளும், பொலன்னறுவையில் 74% விவசாயிகளும், ஹம்பாந்தோட்டையில் 73% விவசாயிகளும், வவுனியாவில் 69% விவசாயிகளும் நிலத்தை உழுவதற்கு டிராக்டர்களை மட்டுமே பயன்படுத்தினர். இதனால், இந்தக் காலகட்டத்தில், உலர் மண்டல நெல் உற்பத்தி கணிசமான அளவிற்கு இயந்திரமயமாக்கப்பட்டது. நீர் பம்புகளின் இறக்குமதியிலும், களையெடுக்கும் எந்திரங்கள், விதைக்கும் எந்திரங்கள், கலப்பைகள், அறுவடை எந்திரங்கள், தூசி இயந்திரங்கள் மற்றும் தெளிப்பான்கள் போன்ற பிற இயந்திர உபகரணங்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டது.

4) விவசாய இரசாயனப் பொருட்களின் பயன்பாடு: விவசாயத் திட்டங்கள் நெல் நோய்களின் இரசாயனக் கட்டுப்பாடு மற்றும் பூச்சிகள் மற்றும் களைகளை ஒழிப்பதில் முக்கியத்துவம் அளித்தன. தேவைப்படும் விவசாய இரசாயனப் பொருட்களின் விலை 1965-66இல் 2 மில்லியன் இலங்கை ரூபாய்களில் இருந்து 1969-70இல் 4 மில்லியனாக உயரும் என்று அவர்கள் கருதினர். தெளிக்கும் கருவிகளை இறக்குமதி செய்வதற்கு மேலும் 3 மில்லியன் எதிர்பார்க்கப்பட்டது. இந்த இறக்குமதிகளின் விலை கிட்டத்தட்ட இந்த நிலைகளை எட்டியது. இதன் விளைவாக விவசாயிகளால் வேளாண் வேதிப்பொருட்களின் பயன்பாடு அதிகரித்தது, இருப்பினும் சில மாவட்டங்களில் விவசாயிகளால் சில எதிர்ப்புகள் இருந்தன.

(5) விரிவாக்க சேவைகள்: விவசாய விரிவாக்க சேவை முழு விவசாய மேம்பாட்டுத் திட்டத்திலும் பலவீனமான இணைப்பாக அமைந்தது. கிராம மட்டத்திலும் விவசாய பயிற்றுவிப்பாளர் மட்டத்திலும் விரிவாக்க அலுவலர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததால், அவர்கள் திறமையாக செயல்பட முடியாத அளவுக்கு பெரிய பகுதிகளை அவர்கள் உள்ளடக்கினர். இதன் விளைவாக, விவசாய விரிவாக்க சேவையின் தாக்கம் குறைவாகவே இருந்தது. நாற்று நடுதல், வரிசைகளில் நடவு செய்தல் மற்றும் முறையான களையெடுத்தல் போன்ற மேம்பட்ட விவசாய நடைமுறைகளின் நன்மைகள் போதுமான அளவு பிரபலப்படுத்தப்படவில்லை. அதிக மகசூலை அடைவதில், நடவு செய்வது மிக முக்கியமான நடைமுறையாகும். லபுடுவாவில் நடத்தப்பட்ட பரிசோதனைகள், நடவு செய்வது மகசூலில் 30% முதல் 40% வரை அதிகரிப்பைக் கொடுத்ததாகக் காட்டுகின்றன.

விரிவாக்கப் பணிகளுக்காக வாகனங்களை இறக்குமதி செய்யும் திட்டம் நடைமுறையில் பலனளிக்கவில்லை. அதற்கு பதிலாக, “சிறப்பு குத்தகைகளாக” பெரிய நிலங்களை ஒதுக்கிய பெரிய நிறுவனங்களால் அதிக எண்ணிக்கையிலான மினிமோக் ஜீப்புகள் மற்றும் லாரி சேசிஸ் ஆகியன இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டன. துணை உணவுப் பயிர்களைப் பயிரிட விரும்பும் தனியார் வணிக நிறுவனங்களுக்கு ‘சிறப்பு குத்தகைகளாக’ 30,000 ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்கு வழங்குவதாக, ஆண்டு இலக்கை விவசாயத் திட்டங்கள் நிர்ணயித்திருந்தன.

(6) விவசாய கடன்: 1966 மற்றும் 1970க்கு இடையில் நெல் உற்பத்தியில் மொத்தம் ரூ.132 மில்லியன் முதலீடு செய்யப்பட இருந்தது. நிறுவன மற்றும் தனியார் கடன் நீண்ட காலமாக நெல் விவசாயிகளுக்குக் குறுகிய கால நிதியுதவிக்கு ஊற்று மூலமாக இருந்து வருகிறது. ஏனெனில் நெல் உற்பத்தி பெரும்பாலும் சிறிய நிலங்களில் உள்ளது. 1967 ஆம் ஆண்டில் மொத்த நெல் பரப்பளவான 1,331,231 ஏக்கராக இருந்தது. இருந்தாலும் பெரும்பான்மையான நிலங்களின் உரிமையாளர்களுக்கும் 2 ஏக்கருக்கும் குறைவான நிலமே இருந்தது. அதில் 60% நிலங்களைக் கொண்டிருப்போரிடம் 1 ஏக்கருக்கும் குறைவாக நிலமே இருந்தது. 2 ஏக்கருக்கும் குறைவான நெல் நிலம் ஒரு பண்ணை மையக் குடும்பத்தின் வெறும் வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமான வருமானத்தை ஈட்ட இயலாது என்று கூறப்படுகிறது. இதன் விளைவாக, நுகர்வு மற்றும் உற்பத்தித் தேவைகள் இரண்டிற்கும் கடுமையான கிராமப்புற கடன் ஒரு உள்ளூர் அம்சமாக இருந்து வந்தது. கிராமப்புற கடன் உண்மையில் அதிகரித்து வந்தது. 1950 ஆம் ஆண்டில், 30% குடும்பங்கள் மட்டுமே கடனில் இருந்தன. மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் துறை கணக்கெடுப்பின்படி, 1957ஆம் ஆண்டு வாக்கில் 54% கிராமப்புற குடும்பங்கள் கடனில் இருந்தன, மேலும் கிராமப்புறத் துறையின் மொத்தக் கடன் 500 மில்லியன் ரூபாய்களாக இருந்தது, இதில் அண்ணளவாக 245 மில்லியன் ரூபாய்கள் வர்த்தகர்கள் மற்றும் தொழில்முறை வட்டிக்காரரர்கள் போன்ற வட்டிக்கு கடன்பட்ட ஆதாரங்களுக்குச் செலுத்த வேண்டியிருந்தது. 1969ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 54% கிராமப்புற குடும்பங்கள் இன்னும் கடனில் இருந்தன, மேலும், 70% க்கும் அதிகமான கடன் தனியார் மூலங்களுக்குச் செலுத்த வேண்டியிருந்தது. இந்த சூழ்நிலையில், கிராமப்புறத் துறையில் கடன் தேவை என்ற நீண்டகால தேவை உணரப்பட்டது.

1948 முதல் பல்வேறு அரசாங்கங்கள் விவசாயக் கடன் வழங்கும் கொள்கையைப் பின்பற்றி வருகின்றன. அவை எப்போதும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே வழங்கப்பட்டன. கால்நடைகள், பொருட்கள் மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்கும் வேலைச் செலவுகளுக்கும் நீண்ட, நடுத்தர மற்றும் குறுகிய காலக் கடன்கள் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளன. 1948 மற்றும் 1965க்கு இடையில், கூட்டுறவுச் சங்கங்களால் உறுப்பினர் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன் மொத்தம் 251 மில்லியன் ரூபாய்களாகும், அதில் 200 மில்லியன் ரூபாய் வசூலிக்கப்பட்டு மீதமுள்ள தொகை அறவிடமுடியாக் கடனானது. செப்டம்பர் 1967இல் அரசாங்கம் புதிய விவசாயக் கடன் திட்டத்தைத் தொடங்கியது. இதன் மூலம் விவசாய சேவைகள் துறைக்குப் பதிலாக மக்கள் வங்கி மூலம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கக் கடன் வழங்கப்பட்டது. மக்கள் வங்கி கூட்டுறவுச் சங்கங்களுக்கு 9% வட்டியிலும், சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களுக்கு 12% வட்டியிலும் கடன் வழங்கியது.

## கடிதங்கள்

# “வீதியை செப்பனிட்டு தாருங்கள்”

மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட மஸ்கெலியா நகரில் உள்ள மத தளங்களுக்கு மற்றும் பாடசாலைகளுக்கு செல்லும் நுழைவாயில் வீதி பாரிய குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

அவ்வீதியில் ஸ்ரீ சண்முக நாதர் ஆலயம்,சுமணாராம பௌத்த விகாரை, மஸ்கெலியா முஸ்லிம் பள்ளிவாசல், சென் ஜோசப் கிறிஸ்தவ தேவாலயம், சமன்னெலிய சிங்கள பாடசாலை அமைந்துள்ளது. அத்துடன், சுமார் முன்னூறுக்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன.

ஆலயங்களுக்கு செல்லும் பக்தர்கள், பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் பாரிய அளவில் இன்னலுக்கு முகம் கொடுக்க வேண்டி உள்ளது.

இது குறித்து மஸ்கெலியா பிரதேச சபை உடன் நடவடிக்கை எடுத்துக் குறித்த வீதியைச் செப்பனிட்டுத் தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

– செ.தி.பெருமாள்

# கல்லறைத் தோட்டத்தில் ஓர் உயிரின் சாட்சி: செம்மணியின் பால் புட்டி



தி.டிலக்சன்,
அரசறிவியல் துறை
மூன்றாம் வருடம்.
யாழ்.பல்கலைகழகம்.





யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழி... இலங்கை இனப் போராட்ட வரலாற்றில் ஆறாத வடுவாக நிலைத்து நிற்கும் ஒரு பெயர். வார்த்தைகளால் சொல்ல முடியாத சோகத்தையும் மூடி மறைக்கப்பட்ட உண்மைகளையும் சுமந்து நிற்கும் இந்த மண், அண்மைக் காலங்களில் மீண்டும் அகழ்வாராய்ச்சிகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு அகழ்விலும் வெளிப்படும் எலும்புக்கூடுகளும், துணிக்கப்படாத மனித எச்சங்களும், இழைந்துபோன கனவுகளின் சாட்சிகளாக நம்மை உலுக்கி வருகின்றன. இந்த அலைகளில் குறிப்பாக ஒரு சிறு குழந்தையின் பால் புட்டி கண்டெடுக்கப்பட்டது வெறும் ஒரு பொருள் அல்ல; அது அநியாயமாகப் பறிக்கப்பட்ட ஓர் இளம் உயிரின் மௌன சாட்சியம். ஒரு தேசத்தின் மனசாட்சியைத் தட்டி எழுப்ப வந்திருக்கும் ஒரு குறியீடு.

1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இலங்கைப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் அப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக பல மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்தக் குற்றச்சாட்டுகளின் உச்சக்கட்டமாக 1999 ஆம் ஆண்டு இராணுவ சிப்பாய் சோமரத்ன ராஜபக்ஷ என்பவன் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானப் பகுதியில் மனிதப் புதைகுழிகள் இருப்பது வெளிச்சத்திற்கு வந்தது. ராஜபக்சவின் வாக்குமூலம் காணாமல் போன பல இளைஞர்கள் மற்றும் யுவதிகள் இங்கு புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன பல எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. அவற்றில் இளம் பெண்கள் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டிருக்கலாம் என்பதற்கான தடயங்கள் இருந்தன. ஆனால் இந்த வழக்குகளின் விசாரணை மந்த கதியிலேயே நடைபெற்று பல சந்தேக நபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மறுக்கப்பட்ட நிலையிலேயே ஆண்டுகள் கடந்தன.

## பால் புட்டி: மௌனம் கலைக்கும் குழந்தைகளின் அழுகுரல்

காலம் ஒருபுறம் கடந்தாலும் செம்மணியின் துயரம் மக்கள் மனதை விட்டு நீங்கவில்லை. அண்மையில், செம்மணி சித்துப்பாத்தி மயானப் பகுதியில் மீண்டும் அகழ்வாராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவின் பேரில் சட்ட வைத்திய அதிகாரிகள் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தினர் மேற்பார்வையில் இந்த அகழ்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளில் இதுவரை 80க்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் பல குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பெண்களின் எலும்புக்கூடுகளும் அடங்கும் என்பது பெரும் சோகத்தை வரவழைக்கிறது.

இந்த அகழ்வுகளின்போது, கண்டெடுக்கப்பட்ட பல்வேறு சான்றுப் பொருட்களில், ஒரு சிறிய குழந்தையின் பால் புட்டி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பொம்மைகள், புத்தகப்பைகள், சிறுமிகளின் ஆடைகள், காலணிகள், கண்ணாடி வளையல்கள் போன்ற பொருட்களுடன், இந்த பால் புட்டியும் கிடைத்துள்ளது. ஒரு குழந்தையின் பால் புட்டி, ஒரு தாயின் அரவணைப்பையும், குழந்தையின் மழலைச் சிரிப்பையும், எதிர்காலம் குறித்த நம்பிக்கையையும் குறிக்கிறது.

ஆனால், செம்மணியில் கண்டெடுக்கப்பட்ட இந்த பால் புட்டி அநியாயமாகப் பறிக்கப்பட்ட ஒரு குழந்தையின் உயிரையும், அக்குழந்தையின் குடும்பம் அனுபவித்த சொல்லொணாத் துயரத்தையும் பறைசாற்றுகிறது. அந்த பால் புட்டி, ஒரு குழந்தைப் பருவத்தின் முடிவையும், ஒரு குடும்பத்தின் கனவுகளின் சிதைவையும் அழுத்தமாக உணர்த்துகிறது. இது வெறும் ஒரு தொல்பொருள் கண்டெடுப்பல்ல, இது ஒரு சமூகத்தின் கூட்டு மனசாட்சியை உலுக்கும் ஒரு சோக அத்தியாயம்.

அந்தப் பால் புட்டி, ஒரு குழந்தைப் பிஞ்சின் கைகளில் இருந்து நழுவி, அநியாயமாக அடக்கப்பட்டிருக்கும் புதைகுழியில் விழுந்திருக்க வேண்டும். ஒருவேளை, அந்தப் பிஞ்சு உயிர் பாலைப் பருகிக் கொண்டிருக்கும் போதே மிரட்டல்களுக்கும், இடிபாடுகளுக்கும் மத்தியில் அச்சத்தால் உறைந்து, தன் தாயின் மார்பை இறுக்கிப் பற்றிக்கொண்டு, கடைசியாகப் பாலை உறிஞ்சியிருக்குமோ? அல்லது பட்டினியால் துடித்து, ஒருதுளிப் பால் கிடைக்குமா என்ற ஏக்கத்தில் வெற்றுப் புட்டியை உறிஞ்சி, தன் சின்னஞ்சிறிய கண்களை மூடியிருக்குமோ? இந்த கேள்விகள் ஒவ்வொருவரின் மனதையும் சில்லிட வைக்கின்றன. ஒரு குழந்தையின் பால் புட்டி, அதுவும் ஒரு கல்லறைத் தோட்டத்தில், என்ன மாதிரியான அவலங்களின் சான்றாக இருக்க முடியும்? மனிதாபிமானம் மரணித்த ஒரு கணம் அது என்பதை எண்ணிப் பார்க்கையில் மனம் பதறுகிறது.

இந்த பால் புட்டி, சமூகத்திடம் சில கடுமையான கேள்விகளை எழுப்புகிறது.

இந்தக் குழந்தைகளுக்கு நீதி எப்போது கிடைக்கும்? இந்தச் சிறு குழந்தைகள் எந்தத் தவறும் செய்யாதவர்கள். அவர்களின் எதிர்காலம் ஏன் பறிக்கப்பட்டது? இந்த அநியாயங்களுக்குக் காரணமானவர்கள் ஏன் இன்னமும் சுதந்திரமாக இருக்கிறார்கள்?நாம் ஏன் மௌனமாக இருக்கிறோம்? இந்த அவலங்கள் மீண்டும் நடக்காமல் தடுக்க நாம் என்ன செய்தோம்? கடந்த காலத்தின் காயங்களை மறந்து மீண்டும் அதே தவறுகளைச் செய்யத் துணிகிறோமா?மனித உயிர்களின் மதிப்பு இவ்வளவுதானா? ஒரு குழந்தையின் பால் புட்டி ஒரு போரின் அடையாளமாக மாறும் அளவுக்கு மனித உயிர்களின் மதிப்பு குறைந்ததா? என்ற கேள்விகளை இது தொடுக்கின்றது.

தற்காலத்தில் செம்மணி மனித புதைகுழி தொடர்பான விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் வோல்கர் டர்க் அண்மையில் அப்பகுதிக்கு வருகை தந்து அஞ்சலி செலுத்தியதுடன் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து நீதி பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்துள்ளார். இது சர்வதேச சமூகத்தின் கவனத்தை மீண்டும் செம்மணி நோக்கித் திருப்பியுள்ளது. எனினும், இலங்கை அரசாங்கம் இந்த விவகாரத்தில் நிதி ஒதுக்கீடு மற்றும் இதர வசதிகளை வழங்குவதில் தயக்கம் காட்டுவதாகவும் நீதித்துறை மட்டுமே அடுத்தகட்ட நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும் என்று கூறி நழுவுவதாகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. கடந்த காலங்களில் இதுபோன்ற வழக்குகள் நீர்த்துப்போன வரலாற்றை தமிழ்ச் சமூகம் கொண்டிருப்பதால் இந்த முறையாவது உண்மையான நீதி கிடைக்கும்மா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் நிலவுகிறது. குறிப்பாக, காணாமல் போனவர்களின் உறவுகள் 16 வருடங்களுக்கும் மேலாக நீதிக்காகப் போராடி வருகின்றனர். செம்மணியில் கண்டெடுக்கப்பட்ட ஒவ்வொரு எலும்புக்கூடும், ஒவ்வொரு பொருளும், அவர்களின் நீதிக்கான தேடலுக்கு வலு சேர்க்கின்றன. ஒரு வயது குழந்தை முதல் 15 வயது வரையிலான குழந்தைகள் குடும்பத்துடன் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருப்பது அகழ்வுப் பணிகளின்போது, தெரிய வந்துள்ளது, இது மனதை உலுக்கும் அதிர்ச்சி சம்பவம்.

செம்மணியின் பால் புட்டி காலம் கடந்து நிற்கும் ஒரு சாட்சியாய் நாம் ஒவ்வொருவரிடமும் ஒரு கேள்வியை எழுப்புகிறது: "மனிதாபிமானம் எங்கே போனது? நீதி எப்போது கிடைக்கும்?" இந்த பால் புட்டி வெறும் ஒரு குழந்தையின் பால் புட்டி அல்ல. இது காணாமல் போன ஆயிரக்கணக்கான உறவுகளின் குரல். இது கண்ணீரும், ரணங்களும் நிறைந்த ஒரு வரலாற்றின் நினைவுச் சின்னம். இது இனி எந்த ஒரு குழந்தையும், எந்த ஒரு மனிதனும் இதுபோன்ற ஒரு கொடூரமான முடிவை சந்திக்கக்கூடாது என்பதற்கான ஒரு வலியுறுத்தல்.

இந்த ஒரு சிறிய பால் புட்டி ஒரு பெரும் அவலத்தின் வாயிலாக சமூகத்தில் ஒரு ஆழமான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். நமது எதிர்கால சந்ததியினர் இத்தகைய துயரமான வரலாற்றை அறிய வேண்டும். போரினால் ஏற்படும் வடுக்கள் வெறும் பௌதிக சேதங்கள் அல்ல, அவை தலைமுறை தலைமுறையாக நீடிக்கும் மனரீதியான காயங்கள் என்பதையும், நீதி கிடைக்காதவரை அமைதி நிலைக்காது என்பதையும் உணர வேண்டும். செம்மணியின் இந்த பால் புட்டி, நம் அனைவரையும் ஒரு சோக நிலைக்கு இட்டுச் செல்கிறது. இது வெறும் ஒரு பழைய பால் புட்டி அல்ல, இது நம் மனசாட்சியைத் தட்டி எழுப்பும் ஒரு அழுகுரல். கடந்த காலம் கண்முன் வந்து நிற்கும் நிமிடம் இது.

செம்மணியின் பால் புட்டி சர்வதேச சமூகத்திடம், மனித உரிமை அமைப்புகளிடம், அரசுகளிடம் ஒரு அழுத்தமான கோரிக்கையை முன்வைக்கிறது: இந்த மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இத்தகைய கொடூரங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும். இந்த சம்பவங்களை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. செம்மணியின் துயரம் நம் வரலாற்றின் ஒரு கறுப்பு அத்தியாயம் மட்டுமல்ல, அது எதிர்கால தலைமுறைகளுக்கான ஒரு பாடமும் கூட. அந்த பால் புட்டி நம் அனைவரின் மனசாட்சியையும் தட்டி எழுப்பி நீதிக்கான போராட்டத்திற்கு வலு சேர்க்கட்டும். அதன் மௌன அழுகுரல் நீதிக்கான பேரொலியாக மாறட்டும்.

"செம்மணியின் மண்ணில் உறங்கும் அந்த பால் புட்டி நீதி மறுக்கப்பட்ட ஒவ்வொரு குழந்தையின் மௌன அழுகுரல் மறவாதே மனிதனே!"

# IESL உடனான பங்காண்மையை SLT-MOBITEL மேலும் வலுப்படுத்தியது




SLT - MOBITEL, அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த Techno 2025 நிகழ்வில், இலங்கை பொறியியலாளர் நிறுவகத்துடன் (IESL) மீண்டும் கைகோர்த்திருந்தது.

'Engineering for a Smart Nation' எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வு, டிஜிட்டல் உள்ளடக்கம் மற்றும் இலங்கையின் எதிர்காலத்தை தயார்ப்படுத்தும் புத்தாக்கமான பொறியியல் மற்றும் தொழினுட்ப புத்தாக்கங்களை வெளிப்படுத்தும் வகையில், முன்னணி கண்காட்சியாக அமைந்திருந்தது.

உத்தியோகபூர்வ அறிமுக நிகழ்வில், SLT-MOBITEL Group பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க, நிகழ்வின் ஏற்பாட்டாளர்களான IESL இடம் அனுசரணை காசோலையை கையளித்திருந்தார். அந் நிகழ்வில் SLT-MOBITEL இன் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி பிரபாத்த ஹநாயக்கவும் இணைந்தார்.

2025 ஒக்டோபர் 10-12 வரையில் BMICHஇல் இந்தக் கண்காட்சி முன்னெடுக்கப்படும். இதில், SLT-MOBITEL இனால் தொழினுட்ப தீர்வுகள் மற்றும் டிஜிட்டல் மேம்படுத்தல்கள் போன்றன காட்சிப்படுத்தப்பட்டு விருந்தினர்களுக்கு தொழினுட்பம் மற்றும் இணைப்புத் திறனின் எதிர்காலம் பற்றிய விளக்கங்கள் வழங்கப்படும்.

## கொமர்ஷல் வங்கி

# AI இனால் இயங்கும் SME கடன் உத்தரவாதத் தீர்வு அறிமுகம்




இலங்கையின் முதலாவது செயற்கை நுண்ணறிவால் (AI) இயங்கும் SME கடன் உத்தரவாத தீர்வை அறிமுகப்படுத்தவுள்ளதாக கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது. இது சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SMEs) கடன் மற்றும் நிதியியல் தீர்வுகளை எவ்வாறு அணுகுகின்றன என்பதை மீள வடிவமைப்பதில் ஒரு மாற்றத்தக்கதான நடவடிக்கையை எடுக்கிறது.

நாட்டின் மிகப்பாரிய தனியார் துறை வங்கியின் மற்றொரு திருப்புமுனை முயற்சியான இந்த தனிப்பயனுடைய கட்டமைக்கப்பட்ட AI தளமானது, ஒரு முன்னணி உலகளாவிய ஆலோசனை நிறுவனத்துடன் இணைந்து முழுமையாக உருவாக்கப்பட்டதுடன் வங்கியின் உள்ளக திறன்களை உலகத் தரம் வாய்ந்த நிபுணத்துவத்துடன் ஒருங்கிணைக்கிறது. இது கொமர்ஷல் வங்கியின் SME வர்த்தக மாதிரி மற்றும் இடர் கொள்கை கட்டமைப்பிற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இது சந்தை இயக்கவியலைக் கடந்து SME நிதியுதவியை நிலையான முறையில் அதிகரிப்பதற்கான வங்கியின் மூலோபாய அணுகுமுறையை வெளிப்படுத்துகிறது.

இந்த மைல்கல் முயற்சியானது, SME வங்கியை மீள் வரையறை செய்வதற்கான வங்கியின் மூலோபாய உறுதிப்பாட்டையும் பிரதிபலிக்கிறது, இது நாட்டின் SME களுக்கு மிகப்பாரிய கடன் வழங்குனர் மற்றும் இலங்கையின் சிறந்த SME வங்கியாக பல சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ள அதன் அந்தஸ்துக்கு ஏற்றதாக திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தீர்வானது மேம்பட்ட இயந்திர கற்றல் வழிமுறைகள் மற்றும் முன்கணிப்பு பகுப்பாய்வுகளைப் பயன்படுத்தி SME களின் நடத்தைத் தரவை பகுப்பாய்வு செய்வதன் மூலமும், தனியுரிம வழிமுறைகள் மூலம் அவர்களின் நிதியியல் கோரிக்கைகளை மதிப்பிடுவதன் மூலமும் அவர்களின் நிதியியல் தேவைகளை அடையாளம் காண உதவுகிறது.

இந்த செயல்முறைகளை தானியங்குபடுத்தி மேம்படுத்துவதன் மூலம், இந்த தளம் வங்கிக்கு மிகவும் தனிப்பயனாக்கப்பட்ட தயாரிப்புகள் மற்றும் போட்டி விலையை வழங்க உதவுகிறது, அதே வேளை விரைவான கடன் ஒப்புதல் மற்றும் விநியோகத்தை உறுதி செய்கிறது. இந்த தரவு மையப்படுத்தப்பட்ட அணுகுமுறையானது, SMEக்கள் தமது வசதிக்கேற்ப வடிவமைக்கப்பட்ட நிதியியல் தீர்வுகளை அணுகுவதை ஆதரிப்பதுடன் இது கடுமையான தனியுரிமை தரநிலைகளின் அடித்தளமாக உள்ளது.

இந்த முயற்சியின் நோக்கங்களாவன, SME கடன் ஒப்புதல் செயல்முறையை விரைவுபடுத்துதல், வாடிக்கையாளர் வசதியை மேம்படுத்துதல் மற்றும் துறை முழுவதும் நிதியியல் உள்ளடக்கத்தை ஊக்குவித்தல் என்பவையாகும். கொமர்ஷல் வங்கியானது தேசிய பொருளாதாரத்திற்கு SME கள் வழங்கும் முக்கிய பங்களிப்பையும், தொழில்துறையில் ESG நடைமுறைகளை உட்பொதிப்பதன் முக்கியத்துவத்தையும் உணர்ந்து, இந்த திறனை உயிர்ப்பிக்க குறிப்பிடத்தக்க முதலீட்டைச் செய்துள்ளதுடன் சந்தையில் புத்தாக்கத்திற்கான புதிய அளவுகோல்களை அமைத்துள்ளது.

செயற்கை நுண்ணறிவின் பயன்பாடானது வாடிக்கையாளர் தாக்கத்திற்கு அப்பால், சந்தை வரம்பை விரிவுபடுத்துதல், வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துதல், இடர் முகாமைத்துவம் மற்றும் சொத்து தரத்தை வலுப்படுத்துதல், வள செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும் வளர்ந்து வரும் ESG தேவைகளுக்கு ஏற்ப தகவமைப்புத் தன்மையை உறுதி செய்தல் ஆகியவற்றின் மூலம் வங்கிக்கு கணிசமான நன்மைகளை வழங்குகிறது.

உலகின் முதல் 1000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட இலங்கையின் முதலாவது வங்கியாக கொமர்ஷல் வங்கி திகழ்வதுடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் (CSE) வங்கித் துறையில் அதிக சந்தை மூலதனத்தைக் கொண்டுள்ளது. தனியார் துறையின் மிகப்பாரிய கடன் வழங்குநராக விளங்கும் கொமர்ஷல் வங்கி, SME துறையினருக்கு பாரியளவில் கடனுதவி வழங்கும் கடன் வழங்குநராகவும் உள்ளது. மேலும் டிஜிட்டல் புத்தாக்கங்களில் முன்னணியில் திகழும் இவ்வங்கி இலங்கையின் முதலாவது 100% காபன்-நடுநிலைமையை பேணும் வங்கியாகும். கொமர்ஷல் வங்கி நாடளாவிய ரீதியில் மூலோபாய ரீதியாக அமைந்துள்ள கிளைகள் மற்றும் தானியங்கி இயந்திரங்களின் வலையமைப்பை செயற்படுத்தி வருகிறது.

பேங்கொக்

### தாய்லாந்து – கம்போடியா இடையே

# பீரங்கி சண்டையால் பதற்றம்

கம்போடியா இடையே வியாழக்கிழமை (24) அன்று திடீரென்று மோதல் ஏற்பட்டது. இருநாட்டு வீரர்களும் எல்லையில் பயங்கரமாக மோதிக்கொண்டனர். பீரங்கி குண்டுகளால் தாக்கி கொண்ட நிலையில் போர் வெடிக்கிறதா? என்ற பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த மோதலுக்கு கோவில் ஒன்று தான் முக்கிய காரணம் என்ற தகவல் வெளியாகி உள்ளது.



தாய்லாந்தும், கம்போடியாவும் அண்டை நாடுகளாக உள்ளன. இருநாடுகளும் எல்லைகளை பகிர்ந்து வருகின்றனர். இந்நிலையில் தான் தாய்லநாந்தின் வடகிழக்குபகுதியில் உள்ள சுரீன் மாகாணத்தில் பிரசாத் தா மவுன் தாம் எனும் கோவில் அமைந்துள்ளது.

இந்த கோவிலுக்கு கம்போடியா சொந்தம் கொண்டாடி வருகிறது. இந்த கோவில் விஷயத்தில் தாய்லாந்து - கம்போடியா இடையே தொடர்ந்து பிரச்சனை நீடித்து வருகிறது.

இதனால் எப்போது வேண்டுமானாலும் இருநாடுகள் இடையே மோதல் வெடிக்கலாம் என்ற நிலை உருவானது. இதையடுத்து தாய்லாந்து சார்பில் எல்லையில் எஃப் 16 ரக போர் விமானங்கள் குவித்து வைக்கப்பட்டது.

இந்நிலையில், தான் திடீரென்று இருநாடுகள் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

கோவில் விவகாரத்தில் இருநாடுகள் இடையே கடும் மோதல் நடந்தது. இருநாட்டை சேர்ந்தவர்களும் மாறிமாறி தாக்கி கொண்டனர். இருநாட்டு வீரர்களும் பீரங்கி குண்டுகளை வீசினர். இதில் சிலர் காயமடைந்துள்ளனர்.

இந்த மோதல் காரணமாக இருநாடுகள் இடையே பதற்றம் அதிகரித்துள்ளது. இருநாடுகளும் தங்களின் எல்லைகளை மூடி உள்ளனர். மேலும் தூதரக அதிகாரிகளை வெளியேற தாய்லாந்து, கம்போடியா அரசுகள் உத்தரவிட்டுள்ளன.

வொஷிங்டன்

### குடியுரிமை பெறும் விவகாரம்;

# ட்ரம்ப்பின் உத்தரவுக்கு நீதிமன்றம் தடை

அமெரிக்காவில் வேலை உள்ளிட்ட காரணங்களுக்காக தற்காலிகமாக வசிப்பவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்கக் கூடாது என்ற ட்ரம்ப்பின் அறிவிப்பை பெடரல் நீதிமன்றம் நிறுத்தி வைத்து உத்தரவிட்டுள்ளது.



அமெரிக்காவில் தாய் அல்லது தந்தையின் குடியுரிமை எந்த நிலையில் இருந்தாலும், அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைக்கு, அமெரிக்க குடியுரிமை வழங்கப்படுகிறது. அமெரிக்காவின் அரசியலமைப்பு சட்டத்தில், 14ஆவது திருத்தம் இந்த உரிமையை வழங்குகிறது.

ஆனால், இதில் சில கட்டுப்பாடுகளை விதித்து, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவு பிறப்பித்திருந்தார். அதன்படி, சட்டவிரோதமாக அமெரிக்காவில் வசிக்கும் பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு பிறப்பால் குடியுரிமை வழங்கப்படாது.

அதுபோல, தற்காலிகமாக, அதாவது வேலைக்காக அமெரிக்காவுக்கு வந்தவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கும் தானாகவே குடியுரிமை வழங்க முடியாது என்று அறிவிக்கப்பட்டது. ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகத்தின் இந்த உத்தரவுக்கு பல மாகாணங்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. மொத்தமுள்ள, 50 மாகாணங்களில், 22 மாகாணங்கள், இந்த உத்தரவை எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்கு தொடர்ந்தன.

இந்நிலையில், அமெரிக்காவில் வேலை உள்ளிட்ட காரணங்களுக்காக தற்காலிகமாக வசிப்பவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்கக் கூடாது என்ற ஜனாதிபதி ட்ரம்ப்பின் அறிவிப்பை பெடரல் நீதிமன்றம் நிறுத்தி வைத்து உத்தரவிட்டுள்ளது.

மேலும், அரசியலமைப்புக்கு எதிரான அறிவிப்பு என்றும் நீதிபதி கருத்து தெரிவித்துள்ளார். இது ட்ரம்ப் நிர்வாகத்திற்கு பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

பெடரல் நீதிமன்றத்தின் இந்த தீர்ப்புக்கு பல்வேறு தரப்பினர் வரவேற்பு தெரிவித்துள்ளனர். விரைவில் இந்த தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்படும் என்று தெரிகிறது.

சென்னை

# “மகளை நம்பி அனுப்பினேன்: இப்படி செய்து விட்டானே”

### கொலையான குழந்தையின் தாய் கதறல்

சென்னை அயனாவரம் பகுதியை சேர்ந்தவர் சதீஷ்குமார் (வயது 38). இவர் ஸ்பீக்கர் பழுது மற்றும் விற்பனை தொழில் செய்து வருகிறார். இவரது மனைவி ரெபேக்கா. இவர்களுக்கு 7 வயதில் ஸ்டெபி ரோஸ் என்ற மகள் இருந்து வந்தார்.



இந்த நிலையில், கணவன்-மனைவி இடையே ஏற்பட்ட குடும்ப தகராறில் தனது மகளை, மனைவி பிரித்து விடுவாரோ? என்ற அச்சத்தில் ஆலந்தூரில் உள்ள தங்கும் விடுதியில் வைத்து மகள் ஸ்டெபி ரோஸின் கழுத்தை அறுத்து, செவ்வாய்க்கிழமை(22) அன்று கொலை செய்துள்ளார்.

மேலும் தானும் கழுத்தை அறுத்து தற்கொலைக்கு முயன்றதால் உயிருக்கு ஆபத்தான நிலையில், சதீஷ்குமாரை மீட்ட பொலிஸார் சென்னை ராயப்பேட்டை அரசு ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளனர்.

மகளைக் கொலை செய்த வழக்கில் வாலிபர் சதீஷ்குமாரை பரங்கிமலை பொலிஸார் கைது செய்தனர். இவ்வழக்கில் சதீஷ்குமாரை ஆகஸ்டு மாதம் 6-ந் திகதி வரை நீதிமன்ற காவலில் வைக்க ஆலந்தூர் நீதிமன்ற நீதவான் தீபிகா உத்தரவிட்டுள்ளார்.

ரஷ்யா

### விமான விபத்து;

# பயணித்த 50 பேரும் மரணம்



ரஷ்யாவின் கிழக்கு அமூர் பகுதியில் காணாமல் போன பயணிகள் விமானத்தின் எரியும் பாகத்தை, மீட்பு ஹெலிகொப்டர் கண்டுபிடித்ததாகவும் விமானத்தில் இருந்த 49 பேரும் இறந்துவிட்டதாகவும் அந்நாட்டின் அவசரகால அமைச்சக தரப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து ரஷ்யாவின் சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம், “விமானம் ரேடார் கட்டுப்பாட்டில் இருந்து விலகி மாயமானது. அந்த, விமானத்தின் எரியும் உடற்பகுதி கண்டறியப்பட்டுள்ளது.” என்று தெரிவித்துள்ளது.

“இந்த விபத்தில் யாரும் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பில்லை” என உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்ய–சீன எல்லையில் உள்ள பிளாகோவெஷ்சென்ஸ்க் நகரத்திலிருந்து டின்டா நகரத்திற்குச் சென்ற விமானத்தில் 5 குழந்தைகள் உட்பட 43 பயணிகள் மற்றும் 6 பணியாளர்கள் இருந்தனர். 50 பேருடன் சென்ற இந்த பயணிகள் விமானம் ரஷ்யாவின் கிழக்கு அமூர் பகுதியில் சென்றபோது ரேடாரில் இருந்து காணாமல் போனது. இதனை அமூர் பிராந்திய ஆளுநர் வாசிலி ஓர்லோவ் உறுதி செய்துள்ளார்.

சைபீரியாவைச் சேர்ந்த அங்காரா நிறுவனத்தால் இயக்கப்படும் இந்த விமானம், டின்டா விமான நிலையத்தை நெருங்கும் போது ரேடாரில் இருந்து மாயமானதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிகார்

### சோனியா தலைமையில் பாராளுமன்றத்தில்

# எம்.பிக்கள் போராட்டம்

பிகார்பாராளுமன்ற வளாகத்தில் காங்கிரஸின்மூத்ததலைவர் சோனியா காந்தி தலைமையில் வியாழக்கிழமை (24) அன்று எதிர்க்கட்சி எம்.பிக்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

நிகழாண்டு நடைபெறும் பிகார் பேரவைத் தேர்தலை முன்னிட்டு, 22 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பாராளுமன்ற வளாகத்தில் மூன்றாவது நாளாக பதாகைகளுடன் எதிர்க்கட்சி எம்பிக்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

### சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில்

# இரண்டாமிடத்துக்கு முன்னேறிய சேஸ்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் இரண்டாமிடத்துக்கு மேற்கிந்தியத் தீவுகளின் றொஸ்டன் சேஸ் முன்னேறியுள்ளார்.



அவுஸ்திரேலியாவுக்கெதிரான முதலாவது போட்டியில் 60 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே ஒன்பதாமிடத்திலிருந்து ஏழு இடங்கள் முன்னேறி இரண்டாமிடத்தை சேஸ் அடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.ஹர்திக் பாண்டியா, 2.றொஸ்டன் சேஸ்,
3.டிபேந்திர சிங் ஐரீ, 4.மொஹமட் நபி,
5.மார்க்கஸ் ஸ்டொய்னிஸ்.

இதேவேளை, இலங்கைக்கெதிரான மூன்றாவது போட்டியில் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றிய பங்களாதேஷின் முஸ்தபிசூர் ரஹ்மான், பாகிஸ்தானுக்கெதிரான முதலாவது போட்டியில் இரண்டு விக்கெட்டுகளையும், இரண்டாவது போட்டியில் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றிய நிலையில் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் 26ஆம் இடத்திலிருந்து 17 இடங்கள் முன்னேறி ஒன்பதாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.ஜேக்கப் டஃபி, 2.அடில் ரஷீட்,
3.வருண் சக்கரவர்த்தி, 4.அகீல் ஹொஸைன்,
5.அடம் ஸாம்பா, 6.வனிது ஹசரங்க, 7.ரவி பிஷ்னோய்,
8.ரஷீட் கான், 9.முஸ்தபிசூர் ரஹ்மான்,
10.அர்ஷ்டீப் சிங்

இந்நிலையில், அவுஸ்திரேலியாவுக்கெதிரான மேற்குறிப்பிட்ட போட்டியில் 55 ஓட்டங்களைப் பெற்ற மேற்கிந்தியத் தீவுகளின் ஷே ஹோப், துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் 14ஆம் இடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி பத்தாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.ட்ரெவிஸ் ஹெட், 2.அபிஷேக் ஷர்மா,
3.திலக் வர்மா, 4.பில் ஸோல்ட், 5.ஜொஸ் பட்லர்,
6.சூரியகுமார் யாதவ், 7.பதும் நிஸங்க,
8.டிம் செய்ஃபேர்ட்,
9.யஷஸ்வி ஜைஸ்வால், 10.ஷே ஹோப்.

### பந்து காலில் தாக்கியதையடுத்து

# களத்திலிருந்து வெளியேறிய பண்ட்

இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்டில் துடுப்பெடுத்தாடும்போது, காலில் பந்து தாக்கிய நிலையில், களத்தை விட்டு இந்தியாவின் விக்கெட் காப்பாளர் றிஷப் பண்ட் வெளியேறியுள்ளார்.



மன்செஸ்டரில் புதன்கிழமை (23) அன்று ஆரம்பித்த இப்போட்டியின் முதல் நாளில் 37 ஓட்டங்களுடன் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தபோதே பண்ட் காயமடைந்துள்ளார்.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இங்கிலாந்து வென்றதுடன், இரண்டாவது போட்டியை இந்தியா வென்றதுடன், மூன்றாவது போட்டியை இங்கிலாந்து வென்ற நிலையில் இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட இந்தியா, முதல் நாள் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 264 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் ஷர்துல் தாக்கூர் 19 ஓட்டங்களுடனும், இரவீந்திர ஜடேஜா 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர். முன்னதாக சாய் சுதர்ஷன் 61, யஷஸ்வி ஜைஸ்வால் 58, லோகேஷ் ராகுல் 46 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ் 2, கிறிஸ் வோக்ஸ், லியம் டோஸன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இந்திய அணியில் கடந்த போட்டியில் விளையாடிய கருண் நாயர், நிதிஷ் குமார் ரெட்டி, ஆகாஷ் டீப்பை, சுதர்ஷன், ஷர்துல், அன்ஷுல் கம்போஜ் ஆகியோர் பிரதியிட்டிருந்தனர். இதில் கம்போஜ் அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார்.



# மிலனை வென்ற ஆர்சனல்

சிங்கப்பூரில் புதன்கிழமை (23) அன்று நடைபெற்ற இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஏ.சி மிலனுடனான சிநேகபூர்வ போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான ஆர்சனல் வென்றது.

ஆர்சனல் சார்பாகப் பெறப்பட்ட கோலை புகாயோ சாஹா பெற்றிருந்தார்.

# அத்லாண்டா செல்லும் சியெஸ்கா?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லிவர்பூலின் முன்களவீரரான பெடெரிக்கோ சியெஸ்காவைக் கைச்சாத்திட இத்தாலிய சீரி ஏ கழகமான அத்லாண்டா கைச்சாத்திட திட்டமிடுவதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக தமது முன்களவீரரான அடெமோலா லுக்மனின் தமது நிர்ணய விலையான 50 மில்லியன் யூரோக்களை இன்னொரு சீரி ஏ கழகமான ஜுவென்டஸ் சந்திக்குமானால் சியெஸ்காவை கைச்சாத்திட அத்லாண்டா முயலுமெனக் கூறப்படுகிறது.





### சவுதியில் அல்–அஹ்லியிலிருந்து

# விலகி கட்டாரின் அல்–சாட்டில் இணைந்த பெர்மினோ

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லிவர்பூலின் முன்களவீரரான றொபேர்ட்டோ பெர்மினோ, கட்டாரின் அல்-சாட்டில் இணைந்துள்ளார்.

தமது கழகத்திலிருந்து 33 வயதான பெர்மினோ விலகுவதை புதன்கிழமை (23) உறுதிப்படுத்தலையடுத்தே இரண்டாண்டு ஒப்பந்தமொன்றை சாட்டுடன் கைச்சாத்திட்டுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 25, ஜூலை 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.